RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 115 | மே.2 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “மே 4ல் நம் உழைப்புக்கான பலன் கிடைக்கும்” : முதல்வர் ஸ்டாலின்

சென்னை: மே.2-

நம்முடைய கழகத் தோழர்கள் உழைத்திருக்கும் உழைப்பிற்கான பலன் வரும் 4ஆம் தேதி பெற இருக்கிறோம்; அதில் துளி அளவுகூட மாற்றமில்லை என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உழைப்பாளர் நாளை முன்னிட்டு, சென்னை மே தினப் பூங்காவில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், "உரிமைக்காகவும், உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடும் இந்த மே முதல் நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியாவிலேயே முதன்முதலில் இந்த மே முதல் நாளைச் சென்னையில்தான் நாம் கொண்டாடத் தொடங்கினோம். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் தலைமையில்தான் முதன்முதலாகச் சென்னை மாநகரத்தில் இந்த மே முதல் நாள் கொண்டாடப்பட்டது.

உழைப்புக்கேற்ற ஊதியம், தொழிலாளர்களின் உரிமை, அதேபோன்று இன்றைக்கு நம்முடைய கழகத் தோழர்கள் உழைத்திருக்கும் உழைப்பிற்கான பலன் வரும் 4ஆம் தேதி பெற இருக்கிறோம். அதில் துளி அளவுகூட மாற்றமில்லை. இதை ஏதோ கருத்துக் கணிப்பின் அடிப்படையில் நான் சொல்கிறேன் என்று யாரும் கருத வேண்டிய அவசியம் இல்லை. கழகத் தோழர்களை நான் உணர்ந்து கொண்டிருக்கும் காரணத்தினால் அந்தக் கருத்தை நான் எடுத்து வைத்திருக்கிறேனே தவிர வேறொன்றும் இல்லை.



இன்று மே முதல் நாளை, தொழிலாளர்களுக்குரிய மரியாதையையும், மதிப்பையும், அவர்களது உரிமையையும் போற்றும் வகையில் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். மே முதல் நாள் அண்ணா முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், உடனடியாக இந்நாளை அரசு விடுமுறையாக அறிவித்துக் கொண்டாடத் தொடங்கினார். ஊதியத்துடன் கூடிய விடுமுறையாக அறிவித்தது மட்டுமல்லாமல், அந்த விடுமுறை நாளைச் சட்டமாக்கித் தந்தவர் அண்ணாவிற்குப் பிறகு முதல்வராகப் பொறுப்பேற்ற கருணாநிதி.

அது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்த மே முதல் நாள் அரசு விடுமுறையாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இதனை இந்தியா முழுவதும் கொண்டு வர வேண்டும் என்று கருணாநிதி எடுத்துச் சொன்னார். நாடாளுமன்றத்தில் நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் இதற்காகக் குரல் எழுப்பினார்கள். அப்போது பிரதமராக இருந்த வி.பி.சிங் அதனை ஏற்றுக் கொண்டு, தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, இந்தியா முழுமைக்கும் ஊதியத்துடன் கூடிய அரசு விடுமுறையாக அறிவித்து, அதுவும் இன்றைக்கு கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்னும் இரண்டு நாட்களில் தேர்தல் முடிவுகளை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு ஒரு நல்ல செய்தி வரும் என்ற நம்பிக்கை அனைவருக்கும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, 'எல்லாருக்கும் எல்லாம்' என்ற தத்துவத்தின் அடிப்படையிலான கொள்கையோடுதான் நாம் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அது தொடரும், தொடரும், தொடரும் என்ற உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மே நாள் நினைவுப் பூங்காவைத் கருணாநிதிதான் உருவாக்கித் தந்தார்கள். இந்தப் பூங்காவில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுச் சின்னமும் கருணாநிதியால் உருவாக்கப்பட்டதுதான். அது எப்படி அமைய வேண்டும் என்பதற்காகப் பலமுறை இந்த இடத்திற்கு நேரடியாக வந்து, அனைத்தையும் சரிசெய்து உருவாக்கித் தந்தார்.

எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், தொழிலாளர்கள் மீதும், தொழிலாளர்களின் உரிமைகள் மீதும் கருணாநிதி எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருந்தாரோ, அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக நான் மட்டுமல்ல, நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம், பணியாற்றுவோம், உழைப்போம் என்று கூறி விடைபெறுகிறேன்" இவ்வாறு அவர் பேசினார்.

## ‘நட்புடன் உங்களோடு’ : ‘நீட்’ தேர்வெழுதும் மாணவர்களுக்கு மனநல ஆலோசனை!

சென்னை: மே.2-

மருத்துவ மாணவர்கள் மனநல ஆலோசனைப் பெற தமிழக அரசு கட்டணமில்லா தொலைபேசி எண்ணை அறிவித்துள்ளது.

இது குறித்து அரசு சார்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: “மருத்துவ பட்டப் படிப்புகளில் சேருவதற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு வருகின்ற மே 3ம் தேதி (ஞாயிற்றுக் கிழமை) அன்று நடைபெற உள்ளது. மாணவர்களின் மன உறுதி மற்றும் மனநலம் காக்கும் வகையில் தமிழக அரசின் “நட்புடன் உங்களோடு” திட்டம் மூலம் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.





எனவே,’டெலி கவுன்சிலிங்’ (Tele Counselling) தேவைப்படும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தயங்காமல் ”14416” அல்லது ”104” ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு மனநல ஆலோசனைகளை தவறாமல் பெற்றுக் கொள்ளலாம். 24 மணி நேரமும் பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள், மருத்துவர்கள் மூலம் கட்டணமின்றி இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது” என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “இந்திய நாகரிகம் அமைதியை ஊக்குவித்து வருகிறது” புத்த பூர்ணிமா விழாவில் அமித் ஷா பெருமிதம்

புதுடெல்லி: மே.2-

லடாக் என்பது ஒரு புவியியல் பகுதி மட்டுமல்ல, இது புத்த கலாச்சாரம் மற்றும் கருணையின் உயிரோட்டமுள்ள ஆய்வுக்கூடம் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

லேயில் நடைபெற்ற புத்த பூர்ணிமா கலாச்சார விழாவில் உரையாற்றிய அமித் ஷா, “இந்திய நாகரிகம் நீண்டகாலமாக அமைதியை ஊக்குவித்து வருகிறது. இப்பகுதியில் பல நூற்றாண்டுகளாக அறிவு சார்ந்த கலாச்சார மரபுகளும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



தலாய் லாமா இங்கு வரும்போது எல்லாம், இந்த நிலம் வெறும் புவியியல் ரீதியானது மட்டுமல்ல, இது பவுத்த கலாச்சாரம் மற்றும் கருணையின் உயிரோட்டமுள்ள ஆய்வுக்கூடம் என கூறுவார். 75 ஆண்டுகளுக்குப் பிறகு புனித பவுத்த தாதுக்கள் மீண்டும் லடாக்கிற்குத் திரும்பியுள்ளதால், இந்த ஆண்டு புத்த பூர்ணிமா தனிச் சிறப்புப் பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் மலைப்பகுதிகளில் சாலை வசதி மற்றும் இணைப்பு வசதிகள் குறைவாக இருந்ததால், மிகக் குறைந்த மக்களே இந்த புனிதத் தாதுக்களைத் தரிசிக்க முடிந்தது. ஆனால் தற்போதுள்ள வசதிகளால் லடாக், கார்கில் மற்றும் பிற சமூக மக்கள் இதன் மூலம் ஆன்மீக மற்றும் தெய்வீக உத்வேகத்தைப் பெற முடியும்" என தெரிவித்தார்.



## தனுஷ்கோடியில் கடல் சீற்றம் : பக்தர்கள், சுற்றுலா பயணிகளுக்கு கட்டுப்பாடு!

ராமேசுவரம்: மே.2-

தனுஷ்கோடி கடலோரப் பகுதிகளில் கடல் சீற்றமாகக் காணப்படுவதால் பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் கடலில் இறங்கி குளிக்க போலீஸார் தடை விதித்துள்ளனர்.

ராமேசுவரத்தில் இருந்து சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் தனுஷ்கோடியும், அங்கிருந்து 5 கி.மீ தொலைவில் அரிச்சல் முனை என்ற பகுதியும் உள்ளது. தனுஷ்கோடியைப் பார்ப்பதற்கு சுற்றுலாப் பயணிகளும், அரிச்சல் முனையில் புனித நீராட பக்தர்களும் இந்தியாவின் பல்வேறுப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான வாகனங்களில் தினந்தோறும் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக தனுஷ்கோடியில் தெற்கு மன்னார் வளைகுடா கடற்பகுதி சீற்றமாகக் காணப்படுவதால் தனுஷ்கோடி அரிச்சல் முனை தேசிய நெடுஞ்சாலையில் கடல் அரிப்பில் இருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட தடுப்பு வேலி கற்கள் சாலையில் சிதறி கிடக்கின்றன. கடல் சீற்றம் மற்றும் பலத்த காற்றினால் தனுஷ்கோடி, முகுந்த ராயர் சத்திரம், அரிச்சல் முனை ஆகிய பகுதிகளில் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு போலீஸார் தடை விதித்துள்ளனர்.

present sale for
all over Tamil Nadu
தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## “தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் திமுகவின் சித்து விளையாட்டுகளே”: அன்புமணி

சென்னை: மே.2-

மோசடிகளுக்கும், முறைகேடுகளுக்கும் இடம் கொடுக்காமல் அதிமுக, பாமக மற்றும் கூட்டணி கட்சி முகவர்கள் கவனத்துடனும், விழிப்புடனும் பணியாற்ற வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் 23ம் தேதி நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் மே 4ம் தேதி எண்ணப்படுகின்றன. அரும்பாடு பட்டு செய்த வெள்ளாமையின் பயன்களை அறுவடை செய்து வீட்டுக்கு கொண்டு வரும் நடைமுறைக்கு ஒப்பானது தான் வாக்கு எண்ணிக்கை என்பதால் அதில் அதிமுக மற்றும் பாமக கூட்டணி கட்சிகளின் முகவர்கள் மிகவும் விழிப்புடன் செயல்பட வேண்டும்.



தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்காக மார்ச் மாத மத்தியில் தொடங்கி ஏப்ரல் 21ம் தேதி வரை நடைபெற்ற பரப்புரையின் போது தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்காக இரவு, பகல் பாராமலும், கடும் வெயிலையும் பொருட்படுத்தாமலும் உழைத்ததிலும், ஏப்ரல் 23ம் தேதி நடைபெற்ற வாக்குப்பதிவின் போது தேனீக்களைப் போலப் பணியாற்றி அனைத்து வாக்காளர்களையும் வாக்குச்சாவடிகளுக்கு கொண்டு சென்று வாக்களிக்கச் செய்ததிலும் அதிமுக, பாமக, பாஜக, அமமுக, தமாகா, ஐஜேகே, புதிய நீதிக் கட்சி, புரட்சி பாரதம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இடையே காணப்பட்ட ஒருங்கிணைப்பு வியப்பையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

சட்டப்பேரவைத் தேர்தலில் பரப்புரை, வாக்குப்பதிவு என இதுவரை நாம் கடந்து வந்த இரு கட்டங்களை விட வரும் மே 4ம் தேதி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கை எனும் மூன்றாம் கட்டம் தான் மிகவும் முக்கியமாகும். இந்தத் தேர்தலில் வெற்றி நமக்கு தான் என்பதை தேர்தல் பரப்புரையின் போதே நன்றாக அறிந்து கொள்ள முடிந்தது. வாக்குப்பதிவு நாளன்றும் ஆட்சியாளர்களுக்கு எதிரான தங்களின் கோபத்தை மக்கள் வெளிப்படுத்தியதைப் பார்க்க முடிந்தது. நாம் அடையப் போகும் இந்த வெற்றிக்கு அதிகாரப்பூர்வ அந்தஸ்து வழங்கப்போவது மே 4ம் தேதி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கையின் நிறைவில் அறிவிக்கப்படவுள்ள அதிகாரப்பூர்வ முடிவுகள் தான். அதனால் தான் வாக்கு எண்ணிக்கை எனும் மூன்றாம் கட்டத்தில் நாம் இன்னும் விழிப்புடனும், ஒருங்கிணைப்புடனும் பணியாற்ற வேண்டும்.

ஐந்தாண்டு காலமாக தமிழ்நாட்டைச் சுரண்டி கொள்ளையடித்த திமுக, ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள அனைத்து வகையான தில்லு முல்லுகளையும் அரங்கேற்றும். தமிழ்நாட்டில் வெளியாகியுள்ள தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளில் பலவும் கூட திமுகவின் சித்து விளையாட்டுகள் தான். மக்களுடன் மக்களாக களப்பணியாற்றி, அவர்களின் நாடித்துடிப்பை நன்கு அறிந்த நமக்கு மக்களின் மனநிலையும், ஆட்சியாளர்களுக்கு எதிரான கோபமும் நன்றாகத் தெரியும். அவ்வாறு இருக்கும் போது செயற்கையாக சித்தரிக்கப்பட்ட தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளை எவரும் நம்பத் தேவையில்லை. மாறாக, வாக்கு எண்ணிக்கை நாளில் வாக்கு எண்ணும் மையங்களில் விழிப்புடன் பணியாற்ற வேண்டும்.

பாமக மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் வாக்கு எண்ணிக்கை முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள அனைவரும் வாக்கு எண்ணும் நாளான மே 4ம் தேதி காலை 6 மணிக்கே வாக்கு எண்ணும் மையத்திற்கு சென்று விட வேண்டும். வாக்கு எண்ணிக்கைக்குத் தேவையான அனைத்து படிவங்களையும் முகவர்களுக்கு வழங்க வேண்டும். ஒவ்வொரு சுற்று வாக்கு எண்ணிக்கைத் தொடங்குவதற்கு முன்பாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பதிவானதாக 17 சி படிவத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் வாக்கு எண்ணிக்கையும், அந்த வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவாகியிருக்கும் வாக்குகளின் எண்ணிக்கையும் ஒன்றாக உள்ளனவா? என்பதை சரி பார்க்க வேண்டும். அதன் பின்னர் தான் வாக்கு எண்ணிக்கையைத் தொடங்குவதற்கே அனுமதிக்க வேண்டும்.

எத்தகைய சூழலிலும் ஒரு சுற்று வாக்கு எண்ணிக்கை நடத்தி முடிக்கப்பட்டு, அதன் விவரங்கள் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு முன் அடுத்த சுற்று வாக்கு எண்ணிக்கையை தொடங்க அனுமதிக்கக் கூடாது. வாக்கு எண்ணும் மையங்களில் தொகுதியின் தேர்தல் அதிகாரி, பார்வையாளர் ஆகியோரிடம் அறிமுகம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வாக்கு எண்ணிக்கையில் ஏதேனும் தவறுகள் நடந்தால் உடனடியாக அவர்களிடம் புகார் செய்ய வேண்டும். அதையும் மீறி முறைகேடுகளில் ஈடுபட எவரேனும் முயன்றால் உடனடியாக தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு எழுத்து மூலம் புகார் தெரிவிக்க வேண்டும்.

வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்கு முன்பாகவே அஞ்சல் வாக்குகள் எண்ணி முடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அதிகபட்சமாக கடைசி இரு சுற்றுகளின் வாக்கு எண்ணிக்கை தொடங்குவதற்கு முன்பாக அஞ்சல் வாக்கு எண்ணிக்கையின் முடிவுகள் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்படுவதை பாமக மற்றும் கூட்டணி கட்சிகளின் முகவர்கள் உறுதி செய்ய வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் எந்த சூழலிலும் முகவர்கள் அவர்களின் கடமையில் இருந்து விலகக் கூடாது.

தமிழ்நாட்டின் தலை விதியைத் தீர்மானிக்கப் போவது இந்தத் தேர்தலின் முடிவுகள் தான். அதில் எந்த மோசடிகளுக்கும், முறைகேடுகளுக்கும் இடம் கொடுக்காமல் அதிமுக, பாமக மற்றும் கூட்டணி கட்சிகளின் முகவர்கள் கவனத்துடனும், விழிப்புடனும் பணியாற்ற வேண்டும். வெற்றி நமதே!” என்று அன்புமணி அறிவுறுத்தியுள்ளார்.





## உதகை செல்வதற்கு கோவை புதிய பேருந்து நிலையத்தில் கூடுதல் அரசு பேருந்துகள் இயக்க பயணிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

நிலகிரி மே.2-

நீலகிரி மாவட்டத்தில் தற்போது கோடை சீசன் மற்றும் கோடைவிழா துவங்கஉள்ள நிலையில் கோவையில் இருந்து நாள்தோறும் சுற்றுலா பயணிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பொது மக்கள் கோவை புதிய பேருந்து நிலையத்தில் இருந்து குன்னூர், உதகை, கூடலூர், ஆகிய பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ளும் நிலையில், கோவை புதிய பேருந்து நிலையத்தில், உதகை செல்வதற்கு அரசு பேருந்துகள் குறைபாட்டால் கோவை புதிய பேருந்து நிலையத்தில் உதகை செல்வதற்கு வயதானவர்கள், குழந்தைகள், உட்பட பொது மக்கள் நீண்ட நேரமாக வரிசையில் நீண்ட நேரமாக அரசு பேருந்துகளுக்காக காத்திருக்கும் சூழ்நிலை .

நீலகிரி மாவட்டத்தில் கோடை விழா மற்றும் தொடர் விடுமுறை, மேற்கண்ட காரணங்களை மையமாக வைத்து ,உதகை செல்லும் பயணிகள் பாதிக்கபடாமல் இருக்க கோவை புதிய பேருந்து நிலையத்தில் இருந்து உதகை செல்வதற்கு நீலகிரி மாவட்ட அரசு போக்குவரத்து கழகம் கூடுதல் அரசு பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதே பயணிகள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கை.





■ திருவள்ளூர் மாவட்டம், ஆவடி அடுத்த பழைய பம்மதுகுளம் மதுரா எல்லையம்மன் பேட்டை கிராமத்தில் எழுந்தருளி, அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ செல்வசித்தி விநாயகர் மற்றும் அருள்மிகு ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் திருக்கோயில்களில் புணராவர்த்தன ஜீர்னோதாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சியாக நடைபெற்றது. வளர்பிறை சப்தமி திதி புனர்பூசம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதனத்தில், ஆகம முறைப்படி சிவாச்சாரியார்களால் வேதமந்திரங்கள் முழங்க புனித நீர் கலசத்தில் பூஜிக்கப்பட்டு மேளங்கள் முழங்க சிவாச்சாரியார்களால் கொண்டு செல்லப்பட்டு விமான கோபுரத்தின் மேல் புனித நீரை ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்பு அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் கிராமவாசிகள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். வருகை தந்த அனைவருக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலயத் தலைவர் பி. ஹரிகிருஷ்ணன் மற்றும் ஆலய விழா குழுவினர், ஊர் பொதுமக்கள் சிறப்பாக கும்பாபிஷனை நடத்தினர்.




■ நிலக்கோட்டையில் தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு சைல்ட் வாய்ஸ் இயக்குனர் அண்ணாதுரை தலைமையில் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. நிலக்கோட்டை வட்டார வர்த்தக வியாபாரிகள் கூட்டமைப்பு பொருளாளர் முருகன், நிகழ்ச்சியில் நிலக்கோட்டை பேரூராட்சி சுகாதார மேற்பார்வையாளர் மஞ்சுளா, பி கே எஃப் அறக்கட்டளை செயலாளர் முருகன், பொருளாளர் இளங்கோ, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாவட்ட துணை அமைப்பாளர் முத்துராஜ், திண்டுக்கல் அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரிய வாகன ஓட்டுநர் மாநில செயலாளர் மணிகண்டன், கூட்டமைப்பு நிர்வாகிகள் ராஜா, பாரதிமுருகன், லட்சுமணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்

## தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மங்கலதேவிகண்ணகி கோயில் முழு நிலவு சித்திரை திருவிழா வெகு விமர்ச்சையாக நடைபெற்றது

தேனி மே. 02-

தேனி மாவட்டம், தமிழ்நாடு மற்றும் கேரள மாநில எல்லையில் அமைந்துள்ள மங்கலதேவி கண்ணகி அம்மன் கோயில் முழு நிலவு சித்திரை திருவிழா தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வெகு விமர்ச்சையாக நடைபெற்றது. தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்கள் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து அம்மனை வழிபட்டனர். மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அதிகாலையில் பொங்கல் வைக்கப்பட்டு, பசுமையை குறிக்கும் வகையில் மங்கல தேவி கண்ணகிக்கு பச்சை பட்டு சாத்தப்பட்டு வண்ண மலர்கள் மற்றும் சிறப்பு அலங்கார பொருட்கள் கொண்டு சிறப்பான முறையில் அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு காட்சி அளித்தார். மேலும் கடந்த ஆண்டைவிட இந்த



ஆண்டு கண்ணகி தேவியினை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பக்தர்களின் வசதிக்காக கூடுதல் பேருந்து வசதிகள், இரண்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட பளியன்குடி வழியாக கோவிலுக்கு நடந்துவரும் பக்தர்களுக்கு வெயிலின் தாக்கம் கருதி வழி நெடுகிலும் ஆங்காங்கே மருத்துவ கூடாரங்கள் அமைத்து, மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது. மேலும், கூடுதலாக குளுக்கோஸ் பொடி, உப்புக்கரைசல் உள்ளிட்ட பொருட்கள் வெயிலின் தாக்கத்தை சமாளிப்பதற்காக வழங்கப்பட்டது. பக்தர்கள் அனைவருக்கும் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத அளவிற்கு தேவையான அளவு சுகாதாரமான குடிநீர், கழிப்பிட வசதி, போன்ற அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும், வாகன நெரிசலை ஒழுங்கு படுத்துவதற்காக வழி நெடுகிளும் காவல்துறையினர் பணியமர்த்தப்பட்டு சீரான போக்குவரத்திற்கான பணிகளை மேற்கொண்டனர். பொதுமக்கள் சிரமமின்றி சென்று வருவதற்கு குமுளி பேருந்து நிலையத்தில் சிறப்பு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.மேலும், கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களின் பாதுகாப்பிற்காக ஏராளமான ஆண், பெண் காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், இரு மாநில வனத்துறையினர் வன விலங்குகளால் பொதுமக்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாத வண்ணம் தடுப்பு வேலிகளை அமைத்து, பாதுகாப்பு பணிகளில்



■ தேனி மாவட்ட காவல்துறையில் சிறப்பாக பணியாற்றி,பணி நிறைவு பெறும் காவல்துறையினருக்கு தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹாப்ரியா, தனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்தார்.இந்நிகழ்வில், நீண்ட காலமாக காவல்துறையில் நேர்மை, ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி ஓய்வு பெறும் காவல்துறையினரின் சேவையை பாராட்டி, அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.மேலும், ஓய்வு பெறும் காவல்துறையினரின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைய வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டதுடன், அவர்கள் காவல்துறைக்கு வழங்கிய அர்ப்பணிப்பான சேவை நினைவுகூரப்பட்டது.இந்நிகழ்ச்சியில் காவல் அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெறும் காவல்துறையினரின் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டனர்.



■ சித்ரா பவுர்ணமி விழா: மஹா சுதர்சன யாகம்கிருஷ்ணகிரி பழையபேட்டை மலையப்ப சீனிவாச பெருமாள் கோவிலில் சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு மஹா சுதர்சன யாகம் நடைபெற்றதுநேற்று முன்தினம் காலை, மாலை யாக வேள்விகள் நடந்த நிலையில், நேற்று மூன்றாம் மற்றும் நான்காம் கால யாகங்களுடன் ஹோமங்கள் நடைபெற்றன.இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர்.இன்று ஐந்தாம் கால யாகம், பால்குட ஊர்வலம், குத்துவிளக்கு பூஜை நடைபெற உள்ளது.






■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடவுள்ள வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள், நுண்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான பயிற்சி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## யானைகள் அச்சம்: விவசாயிகள் கவலை

கிருஷ்ணகிரி மே 2-

கிருஷ்ணகிரி மாவட்டம்பர்கூர் அருகே நந்திபெண்டா, நேரலகோட்டை காப்புக்காடு பகுதிகளில் 5 யானைகள் முகாமிட்டு கிராமப்புறங்களில் சுற்றித் திரிகின்றன.வறட்சியிலும் பயிரிட்ட கேழ்வரகு, நெல் பயிர்களை இரவில் யானைகள் சேதப்படுத்துகின்றன. இதனால் ஜெகினிகொள்ளை உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர்.யானைகளை விரட்ட வனத்துறையினர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.





■ நரசிம்ம ஜெயந்தி விழா: பக்தர்கள் திரளாக பங்கேற்புகிருஷ்ணகிரி பழையபேட்டை லட்சுமி நரசிம்ம சுவாமி கோவிலில் நரசிம்ம ஜெயந்தி விழா நேற்று நடைபெற்றது. காலை 5 மணிக்கு புண்யாவாசனம், கலச ஸ்தாபனம் உள்ளிட்ட ஹோமங்கள், பூர்ணாஹூதி நடைபெற்றன.பின்னர் மஹா அபிஷேகம், சிறப்பு அலங்காரம், தீபாராதனை மற்றும் உற்சவ மூர்த்திக்கு பிரகார ஊர்வலம் நடைபெற்றது.இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு, தீர்த்தப்பிரசாதம் மற்றும் அன்னதானம் பெற்றனர்.

## சூளகிரி அருகே புயல் காற்றால் 800 வாழை மரங்கள் நாசம்

கிருஷ்ணகிரிமே.2-

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே மேலுமலை பகுதியில் நேற்று பெய்த மழையுடன் கூடிய பலத்த காற்று விவசாயிகளை பெரிதும் பாதித்தது.இந்த கடும் காற்றின் தாக்கத்தால் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த 800 வாழை மரங்கள் வேரோடு சாய்ந்து சேதமடைந்தன. இதனால் விவசாயிக்கு கணிசமான பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.பாதிக்கப்பட்ட விவசாயிக்கு அரசு உடனடி நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.





## ஸ்ரீ வில்வ விநாயகர் ஆலயத்தில் ஸ்ரீலட்சுமிகுபேரர், ஸ்ரீஅனுமன் சுவாமிகளுக்கு மஹா கும்பாபிஷேகம் விழா

மாதவரம், மே.2-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ வில்வ விநாயகர் ஆலயத்தில் சித்திரை மாத பௌர்ணமியை முன்னிட்டு புதியதாக ஸ்ரீ லட்சுமி குபேரர், ஸ்ரீ அனுமன் மூர்த்திகள் பிரதேஷ்டையுடன் ஜீர்னோத்தாரன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய ஸ்தாபகரும் செங்குன்றம் ஸ்ரீ லட்சுமி கோல்ட் அவுஸ் உரிமையாளருமான ஏ.ஜெயபால் ஷண்பகவள்ளி ஆகியோர் ஏற்பாடு மற்றும் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், நவக்கிரகம் ஹோமம், கோபூஜை, கரிக்கோலம், கண் திறத்தல், பூர்ணாஹீதி, வாஸ்து சாந்தி, பிரவேசபலி, கும்ப அலங்காரம்,யாகசாலை பூஜைகள், நாடிசந்தானம், தத்துவர்ச்சனை போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது.பின்னர் பட்டப்பாகுருக்கள், சரவண சுவாமி நாதசிவம் ஆகியோர் மேளதாளத்துடன் புனிதநீர் கலசங்களை கொண்டு சென்று அருள்மிகு ஸ்ரீவில்வ விநாயகர் மற்றும் புதிய ஸ்ரீலட்சுமிகுபேரர், ஸ்ரீ அனுமன் சுவாமிகளுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பித்து பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். இதனைத்தொடர்ந்து ஸ்ரீ வில்வ விநாயகர், ஸ்ரீ லட்சுமிகுபேரர், ஸ்ரீஅனுமன் சுவாமிகளுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.



## பணி நிறைவு பெற்ற அரசு பள்ளி ஆசிரியருக்கு பாராட்டு விழா

கிருஷ்ணகிரி, மே 2-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியம் ஜெகதாப் அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றி வந்த தமிழாசிரியர் வி. சிவசண்முகம் (எ) பாபு அவர்கள் பணி நிறைவு பெற்றதையொட்டி சிறப்பான பாராட்டு விழா நடைபெற்றது.பள்ளியின் தலைமை ஆசிரியர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற விழாவில், துணை தலைமை ஆசிரியர் உத்திரகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார். பல ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றிய சிவசண்முகம், மாணவர்களுக்கு தமிழ் மொழி மீது பற்றையும் நல்ல பண்புகளையும் விதைத்து சிறந்த ஆசிரியராக திகழ்ந்தார்.

அவரது கல்விச் சேவையை பாராட்டி சக ஆசிரியர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர். ஏற்புரை ஆற்றிய சிவசண்முகம், "மாணவர்களின் முன்னேற்றமே என் மகிழ்ச்சி" எனக் கூறி தனது பணிக்கால அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.நிகழ்ச்சியின் முடிவில் பள்ளியின் ஆங்கில ஆசிரியை ஷாயின் நன்றி கூறினார். விழாவில் கலந்து கொண்ட அனைவரும் அவரது எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைய வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

## காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் மே தின விழா கோலாகலம்

கிருஷ்ணகிரி,மே.2-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேரூராட்சி அலுவலகத்தில், மே தினத்தை முன்னிட்டு சிறப்பான கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில் குமார் தலைமை தாங்கினார்.நிகழ்ச்சியின் போது, தொழிலாளர்களின் முக்கியத்துவத்தை போற்றும் வகையில் கேக் வெட்டி விழா தொடங்கப்பட்டது. தொடர்ந்து, பேரூராட்சியில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன. இதனால் பணியாளர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.மேலும், தொழிலாளர்களின் உழைப்பை பாராட்டி அவர்களுக்கு நன்றியும் வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன. நிகழ்ச்சியில் பேரூராட்சி அலுவலக பணியாளர்கள் மற்றும் திமுக மாவட்ட அமைப்புசாரா தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செந்தில் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.இந்த மே தின விழா, தொழிலாளர்களின் பங்களிப்பை நினைவூட்டும் வகையில் சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.



## தாம்பரத்தில் மே தினத்தை முன்னிட்டு மனித நேய மக்கள் கட்சி சார்பில் கொடியேற்றி பொதுமக்கள் நீர் மோர் பந்தலை மாநில துணை பொதுசெயலாளர் தாம்பரம் எம்.யாக்கூப் திறந்து வைத்தார்

தாம்பரம் மே.2-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் மனித நேய மக்கள் கட்சியின் தொழிலாளர் சங்கமான மனிதநேய தொழிலாளர் சங்கம் சார்பில் மே தினத்தை முன்னிட்டு கட்சி கொடியேற்றி தொழிற்சங்க நிர்வாகிகள், தொழிலாளிகளுக்கு இனிப்பு வழங்கி மே தின வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து தாம்பரம் எம்.ஆர்.எம்.சுரங்கபாதை அருகே மனிதநேய மக்கள் கட்சி சார்பில்நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. இதில் ம.ம.க மாநில துணை பொதுச்செயலாளர் தாம்பரம் எம்.யாக்கூப் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார்.



பின்னர் பொது மக்களுக்கு தாகம் தீர்க்கும் வகையில் தண்ணீர் பந்தலில் பொது மக்கள்ளுக்கு தர்பூசணி, வெள்ளிரிக்காய், நீர் மோர், நன்னாரி சர்பத், கரும்புச்சாறு உள்ளிட்டவை வழங்கப்பட்டது. மனித நேய மக்கள் கட்சி சார்பில் தண்ணீர் பந்தல் திறக்கப்பட்டும் கோடை காலம் முழுவதும் பொதுமக்களுக்கு தினமும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட தலைவர் ஜாகீர் உசேன் உள்ளிட்ட நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மனித நேய மக்கள் கட்சியின் மாநில துணை பொதுச்செயலாளர் தாம்பரம் எம்.யாக்கூப் செய்தியாளர்களிடம் பேசுகையில், உழைப்பவர் வியர்வை உலரும் முன் ஊதியத்தைக் கொடுத்து விடுங்கள் என்று நபிகள் நாயகம் கூறி உள்ளார்கள். எனவே உலகத் தொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுத்ததன் அடையாளமாக பிரகடனப்படுத்தப்பட்ட மே நாளை கொண்டாடும் தொழிலாளர்களுக்கும் அவர்களின் ஊதியங்களை எப்போது பிடித்தம் செய்யாமல் உரிய முறையில் வழங்கிட வேண்டும் என்று கேட்டுகொண்டார்

### வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு பயிற்சி

## சென்னையின் 16 தொகுதிகளுக்கு வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது

சென்னை: மே.2-

சென்னையில் உள்ள 16 தொகுதி வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபட உள்ள அலுவலர்களுக்கான பயிற்சி நேற்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது.தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில், சென்னை மாவட்டத்தில் 16 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணிக்கை மையங்களான ராணி மேரி கல்லூரி, லயோலா கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை பணி நடைபெறுவதை முன்னிட்டு, வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபடவுள்ள தேர்தல் நடத்தும் அலுவலர்கள், நுண் பார்வையாளர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, அவர்களின் பணிகள் தொடர்பான செயல்முறை பயிற்சி வகுப்பு கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் க.கற்பகம் தலைமையில் நேற்று நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் அரங்கில் நடைபெற்றது.மேலும் சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் தபால் வாக்குகள் தனியாக தலா 4 மேசைகளிலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தலா 14 மேசைகளிலும் எண்ணப்படும்.



இதில் ராணி மேரி கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில் ஆர் .கே.நகர் தொகுதிக்கு 18 சுற்றுகளாகவும், திரு.வி.க. நகர் 17, ராயபுரம் 14, துறைமுகம் 14, சேப்பாக்கம்திருவல்லிக்கேணி 17 சுற்றுகளாகவும் வாக்குகள் எண்ணப்படும்.

லயோலா கல்லூரி மையத்தில் பெரம்பூர் 22 சுற்றுகளாகவும், கொளத்தூர் 21, வில்லிவாக்கம் 19, எழும்பூர் 15, ஆயிரம் விளக்கு 18, அண்ணாநகர் 20 சுற்றுகளாகவும் வாக்குகள் எண்ணப்படும்.அண்ணா பல்கலைக் கழக மையத்தில் விருகம்பாக்கம் 23, சைதாப்பேட்டை 21, தியாகராயநகர்18, மயிலாப்பூர்20, வேளச்சேரி 23 சுற்றுகளாக வாக்குகள் எண்ணப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## சென்னை மெட்ரோ ரயில்கள் ஞாயிறு அட்டவணைப்படி இயக்கம்

சென்னை::மே.2-

உழைப்பாளர் தினத்தை ஒட்டி, மெட்ரோ ரயில்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை அட்டவணைப்படி இயக்கப்படும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.உழைப்பாளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதை ஒட்டி, இன்று (1ம் தேதி) அரசு விடுமுறை தினம் என்பதால், மெட்ரோ ரயில்களில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.7, 10, 15 நிமிட இடைவெளி

எனவே இன்று ஞாயிற்றுக்கிழமை அட்டவணைப்படி மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என்று மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.இதுகுறித்து, அந்நிறுவனம் வெளியிட்ட பதிவு: சர்வதேச உழைப்பாளர் தினத்தை ஒட்டி, ஞாயிற்றுக்கிழமை கால அட்டவணைப்படி, இன்று மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.காலை 5 மணி முதல் இரவு 11 மணி வரை மெட்ரோ ரயில் சேவை இயக்கப்படும். காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், இரவு 8 மணி முதல் இரவு 10 மணி வரையும் 10 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.நண்பகல் 12 மணி முதல் இரவு 8 மணி வரை 7 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். இரவு 10 மணி முதல் 11 மணிவரை 15 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயில்வே துறையில் ஆள்குறைப்பு அறிவிப்பை அரசு உடனே திரும்பப்பெற வேண்டும்: சிபிஎம்

விருதுநகர்:மே.2-

ரயில்வே துறையில் ஆள் குறைப்பு அறிவிப்பை மத்திய அரசு உடனே திரும்பப்பெற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம் தெரிவித்துள்ளார்.மே தினத்தை முன்னிட்டு விருதுநகரில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மே தின கொடியேற்றும் நிகழ்ச்சி இன்று காலை நடைபெற்றது. கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம் கலந்துகொண்டு கொடியேற்றி கட்சியினருடன் உறுதிமொழி ஏற்றார். அப்போது அவர் அளித்த பேட்டியில், "மே தின தியாகிகளுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வீர வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். உலகம் முழுவதும் சாதி, மதம், இனம், மொழி கடந்து தொழிலாளர்களின் உரிமை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.



அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரன் மீது தொடுத்த யுத்தம் காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிவாயு விலை உயர்ந்துள்ளது. வணிக சிலிண்டர் விலை ரூ.3,250 வரை உயர்ந்துள்ளதால் ஓட்டல் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. பல தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வீட்டு உபயோகத்திற்கான சிலிண்டர் தட்டுப்பாடும் ஏற்படும்.நிச்சயம் பெட்ரோல் பொருள்கள் விலையை மத்திய அரசு, அடுத்த ஒரு சில நாள்களில் கடுமையாக உயர்த்த உள்ளது. 5 மாநில சட்டப் பேரவைத் தேர்தல் காரணமாகவே இதுவரை விலை உயர்த்தப்படாமல் இருந்தது. ஏற்கனவே கச்சா எண்ணெய் விலை குறைவாக இருந்தபோது மத்திய அரசு பெட்ரோலிய பொருள்களின் விலையை குறைக்கவில்லை. தொழிலதிபர்களான நண்பர்களின் லாபத்திற்காக குறைக்கவில்லை. தற்போது சர்வதேச அளவில் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், சுமைகள் அனைத்தையும் மக்கள் தலையில் சுமத்துவதைத்தான் மத்திய அரசு கடைபிடிக்கிறது.

தேர்தல் முடிந்தவுடன் ரயில்வேயில் சுமார் 30 ஆயிரம் பணியிடங்களை ஒழிப்பது என்ற முடிவை மத்திய அரசு அறிவித்துள்ளது. இது வண்மையான கண்டனத்திற்கு உரியது. வேலையை எதிர்பாத்து இருக்கும் இளைஞர்களின் கனவில் மண்ணை அள்ளிப்போட்டுள்ளது. உடனடியாக இந்த அறிவிப்பை திரும்பப்பெற வேண்டும்.ரயில்வே விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நேரத்தில் பணியாளர்கள் எண்ணிக்கையை குறைப்பது கண்டனத்திற்கு உரியது. பயணிகள் பாதுகாப்பைப்பற்றி கவலைப்படாமல் அரசு செயல்படுகிறது என்பதற்கான எடுத்துக்காட்டு. பொதுத்துறை நிறுவனங்களில் இதுபோன்ற நடவடிக்கைகளால் இட ஒதுக்கீடு என்பது இல்லாமல் போகும்.

உழைப்புச் சுரண்டல் என்பது எல்லையில்லாமல் உள்ளது. 8 மணி நேரம் என்பது 10 12 மணி நேரம் 16 மணி நேரம் என்று பல துறைகளில் தொழிலாளர்கள் வேலைவாங்கப்படுகிறார்கள். 8 மணி நேரம் வேலை என்பதை உறுதிப்படுத்த மத்திய அரசும் மாநில அரசும் முன்வர வேண்டும்.

தற்போது வெளியாகி உள்ள கருத்துக் கணிப்பு என்பது கருத்து திணிப்பு. நிச்சயம் மக்கள் தீர்ப்புதான் ஏற்கக் கூடியது. விஜய் ஆட்சி அமைப்பார் என்று கருத்துக்கணிப்பு வந்துள்ளது. தமிழ்நாட்டில் இதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள்கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். திமுக தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைக்கும். திமுக ஆட்சி மீண்டும் மலரும்.

பட்டாசு ஆலை வெடிவிபத்தில் 25 பேர் ஒரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளது பெரும் துயரம். விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவதில்லை என்று மீண்டும் மீண்டும் பிரச்சினையாக வருகிறது. ஆலைகளை ஆய்வு செய்யும் அதிகாரிகள் சட்டத்திற்கு உட்பட்டு விதிமுறைகளின்படி நடைபெறுகிறதா, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

உயிரிழப்புகள் இல்லாத வகையில் தொழிலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் யோசிக்க வேண்டும். தொழிலாளர்கள் உயிர் பாதுகாப்புக்கு அந்தந்த நிறுவனங்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். காலனி, சேரி போன்ற பெயர்களில் உள்ளதை மாற்றுவதற்கு திமுக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. நாங்களும் அதை வரவேற்றுள்ளோம். ஆனால், விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே சாதியின் பெயரில் நேரடியாகக் குறிப்பிடக் கூடிய வகையில் உள்ளது. இது அதிர்ச்சியளிக்கிறது. உடனடியாக மாவட்ட நிர்வாகம் அரசு ஆவணங்களில் பெயரை மாற்றுவதற்கும், அந்த ஊர் மக்களிடம் கலந்துபேசி வேறொரு பெயரை வைப்பதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறி னார்.





# மானாமதுரை: வீர அழகர் வைகை ஆற்றில் இறங்கினார் வெண்பட்டு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்





மானாமதுரை மே.02-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் நடைபெற்று வரும் வீர அழகர் கோவில் சித்திரைத் திருவிழாவின் உச்ச நிகழ்வான வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நேற்று அதிகாலை மிக விமர்சையாக நடைபெற்றது. இந்த வைபவத்தை காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டதால் மானாமதுரை நகரம் முழுவதும் திருவிழா சூழல் நிலவியது.

திருவிழாவை முன்னிட்டு, வீர அழகர் கோவிலில் இருந்து தங்கப் பல்லக்கில் எழுந்தருளிய அழகர், வழியெங்கும் அமைக்கப்பட்டிருந்த மண்டகப்படிகளில் பக்தர்களுக்கு அருள் பாலித்து வந்தார். பல்வேறு கிராமங்கள் மற்றும் நகரங்களில் இருந்து வந்த பக்தர்கள் மலர் தூவி, தீபம் ஏற்றி, "கோவிந்தாஞ் கோவிந்தாஞ்" என முழக்கமிட்டு சுவாமியை பக்தி பரவசத்துடன் வரவேற்றனர்.

விழாவின் முக்கிய நிகழ்வாக, வெண்பட்டு உடையில் அழகாக அலங்கரிக்கப்பட்ட கள்ளழகர், வெள்ளைக் குதிரை வாகனத்தில் அதிகாலை நேரத்தில் வைகை ஆற்றில் இறங்கினார். அந்த தருணத்தில் பக்தர்களின் முழக்கங்கள் விண்ணை முட்ட, ஆன்மீக உற்சாகம் உச்சத்தை எட்டியது. ஆற்றில் இறங்கிய அழகருக்கு சிறப்பு ஆராதனைகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன.

பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் வகையில் மஞ்சள் நீர் பீய்ச்சி அடித்து வழிபட்டனர். பெண்கள், குழந்தைகள் என அனைத்து தரப்பு மக்களும் கலந்து கொண்டு இந்த அரிய தரிசனத்தை பெற்றனர். திருவிழாவை முன்னிட்டு மானாமதுரை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சிவகங்கை மாவட்ட காவல்துறை சார்பில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. போக்குவரத்து ஒழுங்கு, கூட்டநெரிசல் கட்டுப்பாடு உள்ளிட்ட நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

வைகை ஆற்றில் கள்ளழகர் இறங்கும் இந்த வைபவம், பக்தர்களின் நம்பிக்கையும் பாரம்பரியமும் இணைந்த முக்கிய ஆன்மீக நிகழ்வாக ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

# மானாமதுரை வைகை ஆற்றில் 35ஆம் ஆண்டு அன்னதான விழா

## பக்தர்களுக்கு உணவு, பானங்கள் வழங்கி சேவைக்கரங்கள் சிறப்பு




மானாமதுரை மே.02-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் நடைபெறும் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான வீரஅழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவத்தை முன்னிட்டு, ரயில்வே காலனி சேவைக்கரங்கள் மற்றும் பிரண்ட்ஸ் கிளப் இணைந்து 35ஆம் ஆண்டு அன்னதான விழாவை நேற்று (மே 01, 2026) விமர்சையாக நடத்தினர்.

வைகை ஆற்றுப் பகுதியில் சிறப்பு பந்தல் அமைக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்தனர். இந்த அன்னதான விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சேவைக்கரங்கள் மற்றும் பிரண்ட்ஸ் கிளப் நண்பர்கள் ஆகியோர் தலைமையில் சிறப்பாக செய்திருந்தனர்.


விழாவிற்கு வந்த பக்தர்களுக்கு குடிநீர், மோர், பானகம் போன்ற பானங்களுடன், இட்லி, வடை, கேசரி, புளிக்கூட்டு உள்ளிட்ட உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன. மேலும், தயிர் சாதம் மற்றும் சாம்பார் சாதம் போன்ற மதிய உணவுகளும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டன.

வைகை ஆற்றில் அழகர் இறங்கும் வைபவத்தை காண பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்களுக்கு இந்த அன்னதானம் பெரும் உதவியாக அமைந்தது. வெயிலின் தாக்கம் அதிகரித்திருந்த நிலையிலும், பானங்கள் மற்றும் உணவு வழங்கப்பட்டதால் பக்தர்கள் தங்களின் தாகத்தையும் பசியையும் தணித்துக் கொண்டனர்.

இவ்விழா சிறப்பாக நடைபெற பலர் தன்னார்வமாக பங்கேற்று உதவி செய்தனர். நிகழ்ச்சி முடிவில், இந்த நற்பணி சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் விழா ஒருங்கிணைப்பாளர்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்தனர்.



■ 3 நாட்கள் விடுமுறை: கிருஷ்ணகிரி சுங்கச்சாவடியில் வாகன நெரிசல்கிருஷ்ணகிரியில் தொடர் 3 நாள் விடுமுறையால் தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் அதிகரித்து சுங்கச்சாவடியில் நீண்ட வரிசை ஏற்பட்டது.பெங்களூரு உள்ளிட்ட நகரங்களில் இருந்து வந்த வாகனங்கள் பல கிலோமீட்டர் தூரம் நின்றதால் பயணிகள் அவதி அடைந்தனர்.சுங்கச்சாவடிகளில் கட்டணம் வசூல் மந்தமாக இருந்ததால் போக்குவரத்து நெரிசல் மேலும் தீவிரமடைந்தது.நெரிசலை கட்டுப்படுத்த போலீசார் நடவடிக்கை எடுத்தாலும் நிரந்தர தீர்வு தேவை என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





■ திருவள்ளூர் மாவட்டம், ஆவடியை அடுத்த ஆரிக்கபேடு கிராமத்தில், அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. பல வருடங்களாக குலதெய்வமாக பக்தர்கள் வழிபட்டு வரும் ஸ்ரீ முனீஸ்வரருக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்விழாவினை சிறப்பான முறையில் ஜி.சண்முகம் மற்றும் ஆலய நிர்வாகிகள், விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர். ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். வருகை தந்த அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# சென்னையில் இணை ஆணையர் உட்பட ஒரே நாளில் 40 போலீஸார் பணி ஓய்வு

சென்னை:மே.2-

இணை ஆணையர் உட்பட சென்னையில் ஒரே நாளில் 40 போலீஸார் பணி ஓய்வு பெற்றனர். சென்னை காவல் துறையில், தலைமையிடத்து இணை ஆணையராக எஸ்.மகேஸ்வரன் பணியாற்றி வந்தார். இவர் மற்றும் உதவி ஆணையர் ராஜா, காவல் ஆய்வாளர் ஹரி தாஸ் மற்றும் 16 காவல் உதவி ஆய்வாளர்கள், 20 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மற்றும் 1 பெண் தலைமைக் காவலர் என மொத்தம் 40 போலீஸார் நேற்றுடன் பணி ஓய்வு பெற்றனர்.

இவர்களுக்கான பணி நிறைவுபாராட்டு விழா, வேப்பேரியில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக், பணி ஓய்வு பெற்ற 40 பேருக்கும் பொன்னாடை போர்த்தி, பாராட்டி சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். பணி ஓய்வு பெற்ற போலீஸார், 22 ஆண்டுகள் முதல் 41 ஆண்டுகள் வரை சிறப்பாக பணிபுரிந்துள்ளனர். அவர்களால் தமிழக காவல் துறைக்கும், சென்னை பெருநகர காவல்துறைக்கும் பெருமை கிடைத்துள்ளது. ஓய்வு பெறுகின்ற காவல் துறையினர் தங்களது உடல் நலனில் அக்கறை செலுத்த வேண்டும் என காவல் ஆணையர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், காவல் கூடுதல் ஆணையர் (தலைமையிடம்) ஜோஷி நிர்மல் குமார், துணை ஆணையர்கள் சுப்பு லட்சுமி, கண்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

# சென்னை - பரதநாட்டியம் பயில சென்ற இடத்தில் மாணவியிடம் பாலியல் அத்துமீறல்

## ஓய்வு பெற்ற அரசு அதிகாரி கைது

சென்னை:மே.2-

நந்தம்பாக்கத்தைச் சேர்ந்த முன்னாள் கடற்படை அதிகாரி ஒருவரது 12 வயது மகள் கோட்டூர்புரத்தைச் சேர்ந்த பரதநாட்டியக் கலைஞரிடம் மாலை நேர பரத நாட்டிய வகுப்புக்கு சென்று வந்தார்.கடந்த 8 மாதமாக சிறுமி பரதநாட்டியம் கற்று வருகிறார். வழக்கம்போல் கடந்த 28ம் தேதி மாலையும் வகுப்புக்குச் சென்றுள்ளார். அப்போது நடனக் கலைஞரின் கணவர், சிறுமியை தனியாக அழைத்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார்.அதிர்ச்சி அடைந்த சிறுமி வீடு திரும்பியதும் இது தொடர்பாக பெற்றோரிடம் அழுதபடி தெரிவித்துள்ளார். அதிர்ச்சி அடைந்த சிறுமியின் பெற்றோர் இது தொடர்பாக கோட்டூர்புரம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தனர்.அதன்படி, போலீஸார் விசாரித்தனர். இதில் பரதநாட்டியக் கலைஞரின் கணவர் சிறுமியிடம் அத்துமீறியது தெரியவந்தது.இதையடுத்து அவர் மீது போக்சோ உட்பட மேலும் சில பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்து பரதநாட்டியக் கலைஞரின் கணவரை கைது செய்தனர்.

இவர் தேனாம்பேட்டையில் உள்ள தலைமைக் கணக்காயர் அலுவலகத்தில் அதிகாரியாக பணியாற்றி கடந்த பிப்ரவரி மாதம்தான் ஓய்வு பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கரூர் அருகே காருக்குள் மூச்சுத்திணறி சிறுவன் உயிரிழப்பு





கரூர்:மே.2-

வீட்டருகே உறை போட்டு மூடியிருந்து காரினுள் ஏறி விளையாடிய சிறுவன், கதவு பூட்டிக் கொண்டதால் மூச்சுத் திணறி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கரூர் மாவட்டம் குளித்தலை அருகேயுள்ள கழுகூரை சேர்ந்தவர் வேலு (36). மனைவி மாரிஸ்வரி (30). மகன் சஞ்சீவி (4). வேலு மாரிஸ்வரி தம்பதியனர் கொத்தனார், சித்தாளாக உள்ளனர். இவர்களின் மகன் சஞ்சீவி நேற்று அப்பகுதியை சேர்ந்த சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது வீட்டருகே உறைப்போட்டு (கார் கவர்) மூடி நிறுத்தப்பட்டிருந்த காரினுள் ஏறி விளையாடியுள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக கதவு பூட்டிக்கொண்டதால் திறக்க முடியாமல் சிறுவன் சஞ்சீவி வெளியேற முடியமல் சிக்கிகொண்டார்.

விளையாட சென்ற மகனை காணவில்லை என பதறிய பெற்றோர், உறவினர்கள் நீண்ட நேரமாகியும் கண்டு பிடிக்க முடியாமல் தவித்துள்ளனர். சந்தேகத்தின் பேரில் வீட்டருகே நின்ற காரின் உறையை அகற்றி விட்டு கண்ணாடி வழியாக காரினுள் பார்த்தபோது சிறுவன் சஞ்சீவி காரினுள் மயங்கிய நிலையில் கிடந்துள்ளார்.

உடனடியாக கார் கதவை திறந்த பெற்றோர் சிறுவனை மீட்டு குளித்தலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தோகை மலை போலீஸார் வழக்குப் பதிவு செய்து சிறுவன் உடலை கைப்பற்றி அதே மருத்துவமனையில் பிரேத பரிசோதனக்கு அனுப்பி விசாரணை நடத்தி வருகின்றனர். மருத்துவமனையில் இருந்த சிறுவனின் பெற்றோர், உறவினர்கள், திரண்டிருந்த கிராமத்தினர் கதறி அழுதது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழகம் முழுவதும் 83 மாவட்ட நீதிபதிகள் இடமாற்றம்



சென்னை: மே. 02-

தவெக தலைவர் விஜய் மற்றும் அவரது மனைவி சங்கீதாவின் விவாகரத்து வழக்கை விசாரித்து வந்த நீதிபதி உள்பட தமிழகம் முழுவதும் 83 மாவட்ட அமர்வு நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியின் உத்தரவுப்படி 83 மாவட்ட நீதிபதிகளை இடமாறுதல் செய்து உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளர் எஸ்.அல்லி உத்தரவிட்டுள்ளார். அதன்படி மதுரை மாவட்ட கூடுதல் நீதிபதி என்.லோகேஸ்வரன் சென்னை உயர் நீதிமன்ற பதிவாளராக (ஆய்வு) இடமாறுதல் செய்யப்பட்டுள்ளார். அங்கு பணியாற்றிய நீதிபதி கே.சுதா திருவள்ளூர் மாவட்ட மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான சிறப்பு நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்ட நீதிபதி ஏ.ஆனந்தகுமார் விருதுநகர் மாவட்ட முதன்மை நீதிபதியாகவும், மதுரை மாவட்ட முதன்மை நீதிபதி எஸ்.சிவகடாட்சம் ராமநாதபுரம் எஸ்சி, எஸ்டி சிறப்பு நீதிமன்ற நீதிபதியாகவும், மயிலாடுதுறை மாவட்ட நீதிபதி எல்.எஸ். சத்தியமூர்த்தி பெரம்பலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதியாகவும், சென்னை பெருநகர உரிமையியல் நீதிமன்ற 6வது கூடுதல் நீதிபதி வி.பாண்டிராஜ் காஞ்சிபுரம் மாவட்ட மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான சிறப்பு நீதிபதியாகவும், செங்கல்பட்டு மகளிர் நீதிமன்ற அமர்வு நீதிபதி எம்.எழிலரசி விழுப்புரம் மகளிர் நீதிமன்ற நீதிபதியாகவும், செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்ற நீதிபதி இ.சசிகலா, செங்கல்பட்டு மகளிர் நீதிமன்ற நீதிபதியாகவும், செங்கல்பட்டு வணிக வழக்குகளுக்கான நீதிமன்ற நீதிபதி டி.சுஜாதா செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்ற நீதிபதியாகவும், நெல்லை மாவட்ட முதன்மை நீதிபதி எம்.சாய் சரவணன் மதுரை மாவட்ட முதன்மை நீதிபதியாகவும், சென்னை எம்.பி, எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி என்.வேங்கடவரதன் நெல்லை மாவட்ட முதன்மை நீதிபதியாகவும், சென்னை பெருநகர உரிமையியல் நீதிமன்ற நீதிபதி ஆர்.சண்முக சுந்தரம், சென்னை எம்.பி, எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிபதியாகவும், சென்னை குடும்ப நல நீதிமன்ற நீதிபதி எஸ்.சுபாதேவி தூத்துக்குடி மாவட்ட முதன்மை நீதிபதியாகவும், திருவண்ணாமலை மாவட்ட முதன்மை நீதிபதி பி.மதிசூதனன் சென்னை சிறுவழக்குகளுக்கான நீதிமன்ற முதன்மை நீதிபதியாகவும் இடமாறுதல் செய்யப்பட்டுள்ளனர். இதேபோல தமிழகம் முழுவதும் மொத்தம் 83 மாவட்ட நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதில் தவெக தலைவரும், நடிகருமான விஜய் மற்றும் அவரது மனைவி சங்கீதாவின் விவாகரத்து வழக்கை விசாரித்து வந்த குடும்ப நல நீதிமன்ற நீதிபதி இ.சசிகலா மாற்றப்பட்டு அவருக்கு பதிலாக டி.சுஜாதா நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161